सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக

**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்
(சட்டமியற்றுத் துறை),
புது தில்லி

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், *1882 (4/1882)*, முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், *1939 (8/1939)*, அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், *1976 (49/1976)*, நிறுமங்கள் (தேசீய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், *1951 (54/1951)*, மாற்று முறையாவணங்கள் சட்டம், *1881 (26/1881)*, நிறுமச் செயலாளர்கள் சட்டம், *1980 (56/1980)* ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், *1973 (50/1973)* இன் பிரிவு *2* இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881

## (சட்ட எண் 26/1881)

[1881, டிசம்பர் 9]

கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள், காசோலைகள் ஆகியவை தொடர்பான சட்டத்தைப் பொருள்வரையறை செய்வதற்கும், திருத்தம் செய்வதற்குமான ஒரு சட்டம்.

முகப்புரை.

கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள், காசோலைகள் ஆகியவை தொடர்பான சட்டத்தைப் பொருள் வரையறை செய்வதும், திருத்தம் செய்வதும் உகந்ததாக இருப்பதால்.

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு.

*1.* இந்தச் சட்டம், மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 என்று வழங்கப்பெறும்.

வட்டார அளாவுகை உண்டிகள் முதலியவை தொடர்பான வழக்காறுகளுக்கான காப்புரை.

இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்; ஆனால், இதில் அடங்கியுள்ள எதுவும், இந்திய நாணயத்தாள் சட்டம், 1871 இன் பிரிவு 21ஐப் பாதிக்காது அல்லது கீழை நாட்டு மொழியிலிருக்கிற முறையாவணம் எதுவும் தொடர்பான வட்டார வழக்காறு எதனையும் பாதிக்காது:

***வரம்புரையாக:*** முறையாவணத்திற்குரிய தரப்பினர்களிடையேயுள்ள சட்டப்படியான தொடர்புகள் இந்தச் சட்டத்தினால் ஆளப்படுதல் வேண்டும் என்ற ஓர் உட்கருத்தை அந்த முறையாவணத்தில் அடங்கியுள்ள எவை சுட்டிக்காட்டுகின்றனவோ அந்தச் சொற்கள் எவற்றினாலும் முறையாவணத்தின் மையப் பகுதியிலிருந்து அத்தகைய வழக்காறுகள் விலக்கப்படலாம்; மற்றும், 1882 மார்ச்சு முதல் நாளன்று இது செல்லாற்றல் பெறும்.

தொடக்கம்.

*2.* [செய்சட்டத்தின் நீக்கறவு] திருத்தம் செய்தல் சட்டம், 1891 (XII/1891)ஆல் நீக்கறவு செய்யப்பட்டது.

பொருள் கோளுக்கான வகையம்.

*3.* இந்தச் சட்டத்தில்,—

"வங்கியர்"

"வங்கியர்" என்பது ஒரு வங்கியராகச் செயற்படும் நபர் எவரையும், அஞ்சலகச் சேமிப்பு வங்கி எதனையும் உள்ளடக்கும்.

"சான்றுறுதி அதிகாரி."

சான்றுறுதிகள் சட்டம், 1952 (LII/1952) இன் பிரிவு 16ஆல் விட்டுவிடப்பட்டது.

### அத்தியாயம் II

### கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச் சீட்டுகள், மற்றும் காசோலைகள் பற்றியது

"கடனுறுதிச் சீட்டுகள்."

*4.* "கடனுறுதிச் சீட்டு" என்பது ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை, ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணையின்படி அல்லது முறையாவணத்தைக் கொணர்பவருக்குச் செலுத்துவதற்காக வரைக்கட்டற்ற ஏற்புறுதியைக்கொண்டிருப்பதும் எழுதுநரால் கையொப்பமிடப்பட்டதுமான (ஒரு வங்கித்தாள் அல்லது நாணயத்தாளாய் இராத) எழுத்து வடிவிலான ஒரு முறையாவணமாகும்.